உடனடி வெளியீட்டுக்காக:

# லெபனான்: வீட்டுப்பணியாளர்களை பாதுகாக்கத் தவறும் நீதித்துறை

***அலட்சியம், நீண்ட நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாட்டு அனுசரனை முறைமை என்பன நீதியைத் தோற்கடிக்கின்றன***

(பெய்ரூட், செப்டெம்பர் 16,2010) - வேலைகொள்வோர்கள் புலம்பெயர் வீட்டுப் பணியாளர்களின் அடிப்படை உரிமைகளை மீறும் பொழுது, அம்மீறல்களுக்காக அவர்களைப் பொறுப்புக் கூற வைப்பதில் லெபனானின் நீதித்துறை தவறிவிடுவதாக, மனித உரிமைகள் கண்காணிப்பகம் இன்று வெளியிட்ட ஒரு அறிக்கையில் தெரிவித்தது. இந்தப் பணியாளர்கள் தங்களது உரிமைகளைப் பாதுகாப்பதற்கு லெபனானிய நீதிமன்றங்களை நம்பியிருக்க முடியுமென்பதை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் திட்டமொன்றைக் கடைப்பிடித்தல் வேண்டுமென, மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்தது.

“பாதுகாப்பற்ற நிலை: புலம்பெயர் வீட்டுப்பணியாளர்களுக்கு லெபனானிய நீதிமுறைமை எவ்விதம் தவறிழைக்கிறது”, எனும் அதன் 54 பக்க அறிக்கை, புலம்பெயர் வீட்டுப்பணியாளர்களைப் பாதிக்கும் 114 லெபனானிய நீதித்துறைத் தீர்ப்புகளை விமர்சிக்கிறது. முறைப்பாடு மேற்கொள்ளும் வகையிலான பொறிமுறைகள், நீண்ட நீதியியல் நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடான வீசா அனுமதிக் கொள்கைகள் என்பன தங்களது வேலைகொள்வோர்களுக்கு எதிராக முறைப்பாடுகளைப் பதிவுசெய்து கொள்ளுதல் அல்லது மேற்கொள்ளுதல் என்பவற்றிலிருந்து பல பணியாளர்களை மனம் மாறச் செய்துவிடுகிறது. பணியாளர்கள் முறைப்பாடுகளைப் பதிவு செய்தாலும் கூட, பொலிஸ் மற்றும் நீதித்துறை அதிகாரிகள் வீட்டுப்பணியாளர்களுக்கெதிரான சில துஷ்பிரயோகங்களை குற்றங்களாகக் கையாள்வதற்கு வழமையாகத் தவறியே வந்துள்ளனர்.

“வீட்டுப்பணியாளர்களைப் பாதிக்கும் வன்முறைகளுக்கு ஒரு பாராமுகமாக இருப்பதன் மூலம், லெபனானிய பொலிஸ் மற்றும் நீதித்துறை ஆகியன இந்த நலிந்த குழுவினருக்கெதிராக வேலைகொள்வோரால் நடாத்தப்படும் உரிமை மீறல்களில் தாங்களும் பங்கு கொள்கின்றனர்”, என்றார் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் பெய்ரூட் பணிப்பாளர், நடிம் ஹௌரி. “பாதிக்கப்பட்டவர் எத்தகைய அடையாளத்தைக் கொண்டிருந்தாலும், ஒருவரை பூட்டி வைப்பதோ அல்லது அவர்களை அறைவதென்பதோ ஒரு குற்றமாகும்.”

மனித உரிமைகள் கண்காணிப்பகம், அது ஆராய்ந்த 114 சம்பவங்களில், பணியாளர்களை வீட்டில் அடைத்து வைத்தல், அவர்களது கடவுச் சீட்டுக்களை பறித்து வைத்திருத்தல் அல்லது அவர்களுக்கு உணவை மறுத்தல் போன்றவை வழக்கமாகக் காணப்படுகின்ற சட்டமீறல்களாக இருந்தபோதிலும் வேலை

கொள்வோரில் ஒருவராவது கூட, இவற்றுக்கான குற்றங்களுக்கு முகம் கொடுத்ததாக எந்தவொரு உதாரணத்தையும் காணவில்லை. லெபனானியக் குடும்பங்கள், பிரதானமாக இலங்கை, எதியோப்பியா, பிலிப்பைன்ஸ் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளிலிருந்து சுமார் 200,000 புலம்பெயர் வீட்டுப்பணியாளர்களை வேலைக்கு அமர்த்தியுள்ளதாகக் கணிக்கப்படுகிறது.

இந்தப் பணியாளர்களால் வேலைகொள்வோர்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் இந்த முறைப்பாடுகள் நீதிமன்றங்களில் அநேகமாக மாதங்கள் மற்றும் சிலவேளைகளில் வருடக் கணக்கில் கூட இழுத்தடிக்கப்படுகின்றன. இது பணியாளர்கள் மீது மேலதிக சுமையை இடுவதாகவுள்ளது, ஏனெனில் லெபனானின் கட்டுப்பாடான வீசா அனுமதிக் கொள்கைகள் அவர்கள் நாட்டில் மேற்கொண்டு தங்கியிருந்து வழக்கை நடாத்துவதைக் கடினமாக்குகிறது. இந்தப் பணியாளர்களால் வேலைகொள்வோர்களுக் கெதிராக தொடரப்பட்ட 13 குற்றவியல் வழக்குகளை மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஆராய்ந்ததில், அவை தீர்க்கப்படுவதற்கு சராசரியாக 24 மாதங்கள் வரையெடுத்ததை கண்காணிப்பகம் கண்டறிந்தது. ஊதியம் வழங்கப்படாமைக்கான வழக்குகள் தீர்க்கப்படுவதற்கு 21-54 மாதங்களுக்கு இடைப்பட்ட காலத்தை எடுத்தன. தொழில் நீதிமன்றங்கள் முன்கொண்டு வரப்பட்ட சிறிய முறைப்பாடுகள் கூட தீர்க்கப்படுவதற்கு சராசரியாக 32 மாதங்கள் வரையெடுத்தன. கஃபீல் (*kafeel)* எனப்படும் அனுசரனை முறைமையின் கீழ் ஒரு வேலைகொள்வோரை விட்டு விலகும் ஒரு பணியாளர் முறைப்பாடொன்றைப் பதிவு செய்திருந்தாலும் கூட லெபனானில் உரிமையை அவர் இழப்பதுடன் அநேகம் தடுத்துவைக்கப்படல் மற்றும் நாடு கடத்தப்படும் சாத்தியத்தை எதிர்நோக்குகிறார்.

புலம்பெயர் வீட்டுப்பணியாளர்களுக்கெதிரான உடல்ரீதியான வன்முறைச் சம்பவங்கள் அநேகம் பொலிஸ் மற்றும் வழக்குத் தொடுக்கும் வழக்குரைஞர்களின் போதுமான கவனத்தையீர்க்கத் தவறுகின்றன. 2005 ஆம் ஆண்டிலிருந்தான ஒரு வழக்கில், ஒரு வேலைகொள்வோரால் வீட்டுப்பணியாளர் அடித்து துன்புறுத்தப்பட்ட முறைப்பாடொன்று கிடைக்கப்பெற்ற பின்னரும் அது பற்றிய புலன்விசாரணையை ஆரம்பிப்பதற்கு பொலிசார் 21 நாட்கள் காத்திருந்தனர். இந்த வழக்குகளின் புலன் விசாரணைகளில், பொலிஸ் வேலைகொள்வோரிடம் வழமையில் பொதுவான சில கேள்விகளைக் கேட்பதும் மற்றும் அவர்களது வாக்குமூலங்களை ஏனைய சாத்தியமான சாட்சிகளுடன் மீள்பரிசீலித்து பார்க்காமல் உண்மையான வாக்கு மூலங்களாக ஏற்றுக்கொள்ளும் ஒரு நிலைப்பாட்டையுமே இந்தப் பணியாளர் களுக்கெதிரான பல்வேறு வன்முறைச் சம்பவங்களில் பொலிஸ் அறிக்கைகளின் மீதானதொரு கண்ணோட்டம் காண்பிக்கிறது.

புலம்பெயர் வீட்டுப்பணியாளர்கள் கடுமையாக அடித்துத் துன்புறுத்தப்பட்டமைக்கு எதிராக அதிகாரிகள் சில வழக்குகளைத் தொடர்ந்திருந்தாலும், அத்தகைய வழக்குகள் அரிதாகவே காணப்பட்டதுடன் அவை சிறிய தண்டனைகளை விதிப்பதற்கு மட்டுமே

இட்டுச் சென்றன. பொதுவாக பாராட்டிப் பேசப்பட்டவொரு வழக்கில், பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த வீட்டுப்பணியாளரொருவரை தொடர்ந்து அடித்துத் துன்புறுத்தியமைக்காக வேலைகொள்வோரொருவரிற்கு டிசம்பர் 9, 2009 அன்று லெபனானிய குற்றவியல் நீதிமன்றமொன்று சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. எவ்வாறாயினும், அத்தண்டனை வெறுமனே 15 நாட்களுக்கு மட்டுமே விதிக்கப்பட்டது. மனித உரிமைகள் கண்காணிப்பகம் அறிந்தவரையில் வழங்கப்பட்ட மிகக் கடுமையான தண்டனையாக, வீட்டுப் பணியாளரொருவரை மிக மோசமாக அடித்துத் துன்புறுத்தியமைக்காக ஒருமாத சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. இது, ஜூன் 26, 2010 இல் குற்றவியல் நீதிமன்றமொன்றினால், இலங்கை வீட்டுப் பணியாளர் ஒருவரை வீட்டிற்குள் பலவந்தமாக அடைத்து வைத்து அவரைத் தொடர்ந்து அடித்துத் துன்புறுத்திய ஒரு வேலைகொள்வோருக்கெதிராக விதிக்கப்பட்டது.

தங்களது பணியாட்களைக் கொலை செய்யும் வேலைகொள்வோர்கள் கூட எளிமையான தண்டனைகளோடு அநேகம் தப்பித்துக் கொள்கின்றனர். 1999 ஆம் ஆண்டின் போதான ஒரு வழக்கில், குற்றவியல் நீதிமன்றமொன்று இலங்கைப் பணியாளரொருவரை சாகும்வரை அடித்துத் துன்புறுத்திய ஒரு வேலை கொள்வோருக்குத் தனியே ஒன்றரை வருடங்கள் சிறைத்தண்டனையை மட்டும் விதித்தது.

“இந்தத் தீர்ப்புகள் சரியான திசை நோக்கி எடுத்து வைக்கும் சிறிய காலடிகளாக உள்ளன, ஆனாலும் அவை வெறுமனே கை மீதானதொரு சிறிய அடியாக மட்டுமேயுள்ளன “ என்றார் ஹெளரி. “வீட்டுப் பணியாளர்களை துஷ்பிரயோகிக்கும் வேலைகொள்வோர்கள் குற்றத்திற்குப் பொருத்தமானதும் அதேவேளை மற்றவர்களுக்கு எச்சரிக்கைகளாகவும் விளங்கும் தண்டனைகளை பெற்றுக் கொள்வதை அதிகாரிகள் உறுதி செய்யவேண்டும்.”

புலம்பெயர் வீட்டுப் பணியாளர்கள் குற்றமொன்றுக்காக, வழமையில் திருட்டுக்காக குற்றஞ்சாட்டப்பட்ட சம்பவங்களின் உரிய செய்முறைகள் மற்றும் வழக்குகளில் நியாயமான விசாரணைக்கானதொரு உரிமை என்பவற்றில் பல மீறல்களை மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஆவணப்படுத்தியுள்ளது. மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஆராய்ந்த, வீட்டுப் பணியாளர்களுக்கெதிரான 84 குற்றவியல் வழக்குகளில், 37 பணியாளர்கள் அதாவது 44 சதவீதமானவர்கள் தமக்கான எதிராளி தரப்பு சட்டத்தரணியொருவரைக் கொண்டிருக்கவில்லை. ஆராயப்பட்ட 84 வழக்குகளில் அநேகமானவை, குறைந்தது 57 பணியாளர்களில், பலர் சரளமாக அரேபிய மொழியில் பேசுவதற்குத் தெரியாமலிருந்தும் கூட, அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்களின் உதவியின்றியே பொலிஸ் மற்றும் நீதிமன்ற நடவடிக்கை களுக்கு முகங்கொடுத்தனர். பணியாளர் மீது கடுமையான குற்றமொன்று சாட்டப்பட்ட வழக்குகளில் கூட உரைபெயர்ப்பாளர்களின் சேவை அரிதாகவே காணப்பட்டது.

அத்துடன், குற்றங்கள் சாட்டப்பட்டு நீதிமன்ற விசாரணைகளுக்கு முன்னராகவே புலம்பெயர் வீட்டுப் பணியாளர்கள் பரவலாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்ததையும் இவ்வறிக்கை கண்டுள்ளது. ஆராயப்பட்ட 84 வழக்குகளில் 64 இல், அதாவது குறைந்த பட்சம் 76 சதவீதமான பணியாளர்கள் விசாரணைக்கு முன்னராகவே சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டனர். நீதிமன்ற விசாரணைகளில் குற்றமற்றவர்களாகக் காணப் பட்டவர்களுள் அநேகமானவர்கள் விடுவிக்கப்படுவதற்கு முன்னராக சராசரியாக மூன்று மாதங்கள் வரை தடுத்து வைக்கப்பட்டிருந்தனர், இருந்தபோதிலும் அதில் நான்கு பேர்கள் நீதிமன்றமொன்றினால் குற்றமற்றவர்களாகக் காணப்படுவதற்கு முன்னர் எட்டு மாதங்களுக்கு மேலாக சிறைகளில் கழித்திருந்தனர்.

"ஒரு சட்டத்தரணி அல்லது மொழிபெயர்ப்பாளரின் உதவி மூலமான நன்மைகளின்றி, வீட்டுப் பணியாளர்கள், அவர்களது வேலைகொள்வோர்களின் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் சிறையிலிடப்படும் நிகழ்வு மிக அதிகளவில் உள்ளதாக" ஹௌரி குறிப்பிட்டார். "குற்றம் நிரூபிக்கப்படும் வரை வேறெவரையும் போலவே குற்றமற்றவராக கருதப்படுவதை உத்தரவாதமளிக்கும் முறையான நடை முறைகளுக்கு அவர்களும் உரித்தானவர்களாவர்".

புலம்பெயர் வீட்டுப் பணியாளர்களை நடாத்தும் முறைகளை தாங்கள் மேம்படுத்த வேண்டுமென, உள்துறை மற்றும் தொழில் என்பவற்றுக்கான அமைச்சர்கள் உட்பட லெபனானிய அதிகாரிகளினால் அண்மைக் காலங்களில் அறிவிப்புகள் விடுக்கப்பட்ட போதிலும், ஜனவரி 2009 இல் அறிமுகப்படுத்தப்பட்டவொரு கட்டாய தொழில் நியம ஒப்பந்தம் போன்ற குறுகிய சீர்திருத்த முன்னெடுப்புகளால் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. புலம்பெயர் வீட்டுப் பணியாளர்களின் வேலைத்தலங்களை பரிசோதித்து அறிவதற்குப் பயனுறுதியான பொறிமுறைகளை உருவாக்குவதற்கும் அரசாங்கம் தவறியுள்ளது.

மனித உரிமைகள் கண்காணிப்பகம், லெபனானிய அதிகாரிகள் பின்வரும் விடயங்கள் மீது கவனம் செலுத்துவற்கு அழைப்பு விடுக்கிறது:

- புலம்பெயர் வீட்டுப் பணியாளர்களுக்கெதிராக புரியப்பட்ட குற்றங்களுக்காக வேலை கொள்வோர்களுக்கெதிரான முறைப்பாடுகள் ஒரு வழக்குத் தொடரலுக்கு இட்டுச் செல்வதற்கான சாத்தியத்தை அதிகரிப்பதற்கு ஒரு தேசிய திட்டத்தை உருவாக்குதல்;

- வேலைகொள்வோர்கள் மற்றும் புலம்பெயர் பணியாளர்களுக்கிடையிலான சம்பளப் பிரச்சினைகளை காலதாமதமின்றியதொரு முறையில் தீர்ப்பதற்காக முரண்பாடுகளைத் தீர்க்கும் எளிமையான பொறிமுறையொன்றை உருவாக்கு வதற்காக சட்டம் இயற்றல்;

- துஷ்பிரயோகம் அல்லது குற்றமொன்றுக்கு குற்றஞ்சாட்டப்பட்டு பாதிக்கப்பட்ட புலம் பெயர் வீட்டுப் பணியாளர்களுக்காக சட்ட உதவி மற்றும் அங்கீகரிக்கப்பட்ட உரைபெயர்ப்பாளர்களின் சேவைகளுக்கான வழிவகைகளை வழங்குதல்;

- புலம்பெயர் வீட்டுப் பணியாளர்களின் துஷ்பிரயோக முறைப்பாடுகளை இனங்கண்டு பதில் நடவடிக்கைகளை எடுப்பதற்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள், குடிவரவு அதிகாரிகள் மற்றும் நீதிபதிகளுக்காக பயிற்சித் திட்டங்களை அமுல்படுத்தல்; மற்றும்

- தடுத்துவைக்கப்படுவோம் மற்றும் நாடு கடத்தப்படுவோம் என்ற அச்சமின்றி முறைப்பாடுகளைப் பதிவு செய்யும் வகையில், பணியாளர்களின் வீசா அனுமதி முறைகள் வேலைகொள்வோரது தனிப்பட்ட அனுசரணைகளுடன் பிணிக்கப்பட்டதாக இல்லாமல் வீசா அனுசரித்தல் முறைமையை சீர்திருத்தம் செய்தல்.

**"பாதுகாப்பற்ற நிலை: புலம்பெயர் வீட்டுப் பணியாளர்களுக்கு லெபனானிய நீதி முறைமைகள் எவ்விதம் தவறிழைக்கிறது", எனும் மனித உரிமைகள் கண்காணிப் பகத்தின் அறிக்கையை http://www.hrw.org/node/93006 எனும் இணையதளத்தில் காணலாம்.**

**லெபனான் மீதான மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் மேலதிக அறிக்கைகளுக்கு தயவுசெய்து http://www.hrw.org/en/middle-eastn-africa/lebanon எனும் இணையதளத்திற்கு விஜயம் செய்யவும்.**

**மேலதிக தகவல்களுக்கு தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்:**

பெய்ரூட்டில், நதீம் ஹௌரி (அரபி, ஆங்கிலம், பிரெஞ்சு): +961-3-639244 (கையடக்கத் தொலைபேசி)